இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 214 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 01 – சனிக்கிழமை 15 மார்ச் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 214: Thiruvalluvar Year - 2056 - Panguni 01 - Saturday 15 March 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம், தேசிய சராசரியை விட அதிகம்!

# இந்தியாவிலேயே முதலாவதான மாநிலப் பொருளாதார ஆய்வறிக்கை!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024–25யை (Economic Survey of Tamil Nadu 2024–25) வெளியிட்டார். உடன் துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழு துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு, செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை துணை செயலாளர் செ.ஆ. ரிஷப் ஆகியோர் உள்ளனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 15–**

**இந்தியாவிலேயே முதலாவதான மாநிலப் பொருளாதார ஆய்வறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டார்.**

தமிழ்நாடு அரசின் சார்பில் முதன் முதலாக பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாநில திட்டக்குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட, இந்த பொருளாதார ஆய்வறிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டார். அனைத்துப் பிரிவினரும் பயன் பெறும் வகையில் மாநில திட்டக்குழு சார்பில் தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25 தயாரிக்கப்பட்டுள்ளது.

### ஜெயரஞ்சன் பேட்டி!

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம், 8 சதவீதமாக இருக்கும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆய்வறிக்கை வெளியீட்டிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளதாக பெருமிதம் பொங்க தெரிவித்தார்.

அவரது பேட்டி வருமாறு:-

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம், 8% ஆக இருக்கும்

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 2 லட்சத்து 78 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. தனிநபர் வருமானம் தேசிய சராசரியான ஒரு லட்சத்து 69 ஆயிரத்தை விட அதிகமாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சி நகர்ப்புறங்களில் பரவலாக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரமே அரசின் இலக்காக உள்ளது.

பிற மாநிலங்களைப் போல அல்லாமல் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புர மையங்களில் பரவலாக்கப்பட்டுள்ளது என்றும் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதாகவும் ஜெயரஞ்சன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் சில்லறை வர்த்தகப் பணவீக்க விகிதம் 4.8% ஆக குறைந்துள்ளது

2019-20ல் 6%ஆக இருந்த நகர்ப்புரப் பணவீக்கம் 2024-25ல் 4.5%ஆக குறைந்துள்ளது

2019-20ல் மொத்தப் பயிர்ப் பரப்பளவில் 32.1% ஆக இருந்த நெல்லின் பங்கு 2023-24ல் 34.4% ஆக அதிகரித்துள்ளது.

விவசாயக் கடன் 2023-24ல் 3 லட்சத்து 58 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும், இறைச்சி உற்பத்தியில் ஆறாம் இடத்திலும் உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் உற்பத்தித்துறை 11.90 சதவீதம் பங்களிக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் நாட்டில் முன்னணியில் உள்ளது.

2021-22 மற்றும் 2023-24ல் உற்பத்தித் துறை 8.33 சதவீதமாகவும், கட்டுமானத்துறை 9.03 சதவீதமாகவும் வளர்ச்சி யடைந்துள்ளது. 2024ல் உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு, 6 லட்சத்து 64ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 14 லட்சத்து 55 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் .

அந்நிய நேரடி முதலீடு 5ஆயிரத்து909 கோடியில் இருந்து 20ஆயிரத்து 157 கோடியாக அதிகரித்துள்ளது பொருளாதார ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்ப ட்டுள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது மாணவர்களின் வருகை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிசெய்துள்ளது. அதைப்போலவே மகளிர் மேம்பாட்டுக்கு என கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணம் உள்ளிட்ட முன்னெடுப்புகளையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு அதன் 2023-30 செயல்திட்டத்தின் வாயிலாகக் காலநிலை சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளது என்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021-22 மற்றும் 2023-24ல் உற்பத்தித் துறை 8.33% ஆகவும், கட்டுமானத் துறை 9.03% ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

2024ல் உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு, 6 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் 14 லட்சத்து 55 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

அந்நிய நேரடி முதலீடு ரூ5,909 கோடியில் இருந்து ரூ.20,157 கோடியாக அதிகரித்துள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது மாணவர்களின் வருகை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்துள்ளது.

மகளிர் மேம்பாட்டுக்கு என கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணம்உள்ளிட்டமுன்னெடுப்புகளையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு அதன் 2023-30 செயல் திட்டத்தின் வாயிலாகக் காலநிலை சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையின் இலட்சினை

## ரூபாயைக் குறிக்கும் 'ரூ' குறியீடு!

சென்னை, மார்ச் 15–

2025-26 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில், நிதிநிலை அறிக்கை குறித்த முன்னோட்ட காணொளியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (மார்ச் 13) வெளியிட்டார். அதில் இருந்த ஒரு படம், நாடு முழுவதும் பேசு பொருளாக மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில், 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற தலைப்பில் நிதிநிலை அறிக்கை முன்னோட்ட காணொளியை வெளியிட்டுள்ளார்.

இந்த காணொளியில் நிதிநிலை அறிக்கை குறித்த இலச்சினையில் ரூபாயை குறிக்கும் குறியீடாக 'ரூ' வை தமிழ்நாடு அரசு பயன்படுத்தி இருந்தது.

### அடுக்கடுக்கான அறிவிப்புகள்; பொதுமக்கள் – கட்சித் தலைவர்கள் பாராட்டு!

# தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான பட்ஜெட்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சட்டப் பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்!

**சென்னை, மார்ச் 15–**

**சட்டப்பேரவையில் நேற்று தமிழ்நாடு மக்கள் அனைவருக்குமான பட்ஜெட்டை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.**

**இந்த பட்ஜெட்டில் அடுக்கடுக்கான அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனை பொதுமக்களும் கட்சித் தலைவர்களும் பாராட்டி வரவேற்றனர். இந்த பட்ஜெட்டை வரவேற்று கழகத்தினர் ஆங்காங்கே இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.**



இவ்வாண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 6 ஆம் தேதி தொடங்கி 11 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது.

இக்கூட்டத் தொடரின் முதல் நாள் 2025-26ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பு, பொருளாதார ஆய்வறிக்கையை தமிழ்நாடு அரசு முதல்முறையாக தாக்கல் செய்தது. பொருளாதார ஆய்வறிக்கையில் அரசின் நிதிநிலை, உள்நாட்டு உற்பத்தி, செயல்படுத்தி வரும் திட்டங்களின் நிலை, வரும் ஆண்டுகளில் மாநில நிதிநிலை எப்படி இருக்கும் என்பன உள்ளிட்ட பல்வேறு தரவுகள் இடம் பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து இன்று (15.03.2025) வேளாண் துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்கிறார். 2025-2026ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மற்றும் 2024- 2025ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மார்ச் 21ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு!

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நேற்று 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. மேலும் இன்று (15ஆம் தேதி) வேளாண் நிதிநிலை அறிக்கையும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மக்கள் – அரசியல் கட்சித் தலைவர்கள் பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள், அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளதை பொதுமக்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் வெகுவாகப் பாராட்டினர். இந்த மக்கள் நலத்திட்டங்களை வரவேற்று கழகத்தினர் ஆங்காங்கே இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தனர்.

### முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில்

## மாநில திட்டக் குழுவின் 6-வது கூட்டம்!

*சென்னை, மார்ச் 15–*

*முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (13.03.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் ஆறாவது கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட "முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம் - இறுதி அறிக்கை", "பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு நடைமுறைகள் குறித்த ஆய்வு" மற்றும் "சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்வியல் பற்றிய ஆய்வு" ஆகிய மூன்று ஆய்வறிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.*

*அதனைத் தொடர்ந்து, மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், இக்குழுவின் செயல்பாடுகள் பற்றியும், ஐந்தாவது திட்டக் குழு கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.*

*இதில், மாநில திட்ட குழுவால் தயாரிக்கப்பட்டு 16.12.2024 அன்று முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்ட கொள்கை வரைவுகள், அரசின் முன்னோடி திட்டங்கள் மீதான மதிப்பீட்டு ஆய்வுகள் மற்றும் இதர ஆய்வுகள் குறித்தும், ஆய்வு முடிவுகளின் விளைவாக, அரசின் முன்னோடித் திட்டங்களால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் அதனால் அடைந்துள்ள பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.*

*மேலும், மாநில திட்டக் குழுவால் செயல்படுத்தப் படும் சிறப்பு திட்டங்களான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம், வளமிகு வட்டாரங்கள் திட்டப் பணிகள் பற்றியும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.*

*இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தின் வளர்ச்சி என்பது சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் மாநில திட்டக் குழுவால் செயல்படுத்தப்படும் வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டம் தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டாரங்கள் அனைத்தும் இணையாக வளர்ச்சி அடையும் நோக்குடன் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

*மேலும், இந்த நான்கு ஆண்டுகளில் மாநில திட்டக் குழு அளித்துள்ள பல்வேறு ஆய்வறிக்கைகள், கொள்கை வரைவுகள் ஆகியவை அரசு துறைகளால் செயல்படுத்தப்பட்டனவா என்பதையும், அரசு செயலர்களால் தங்கள் துறைகளில் இத்திட்டங்களின் பரிந்துரைகளை முறையாக செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும் இக்குழு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*கல்வி, மருத்துவம், சுகாதாரம், சத்துணவு மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்தோடு மாநில திட்டக் குழு விரைந்து செயல்பட்டு ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுத்து, அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.*